**Page No. 144/18**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate at Arakkonam.**

**C.C. 231/12**

**PW: 3 D.W: C.W:**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : வெங்கடேசன் | | Caste | : |
| Father Name | : ஏழுமலை | | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of The day of .05.06.2018**

*********

<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை:</u>

நான் காட்டுப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். சென்னை அரக்கோணம் திருவள்ளூர் ஆகிய பகுதிகளில் கூலிவேலைக்காக செல்வேன். வழக்கு சம்பவம் 31.10.2007ம் தேதி அன்று நடந்தது. நாங்கள் வழக்கமாக 6 அல்லது 6,15 மணிக்கு வேலைக்கு செல்வதற்காக வீட்டில் இருந்து கிளம்பி ஆட்டோவில் ஏறி அனவர்த்திகான் பேட்டைக்கு செல்வோம். அன்றை தினம் வந்த ஆட்டோவில் குறிப்பிட்ட அளவு நபர்களை ஏற்றிக்கொண்டு சென்று விட்டது. அப்போது 25 நபர்களை ஏற்றிசெல்லும் எங்கள் ஊர்காரர் மணிகன்டனுக்கு சொந்தமான வேன் வந்தது அதன் பெயர் தெரியவில்லை. அதனை ஓட்டியவர் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆஜர் எதிரி ஏழுமலைதான். ஒரு ஆறு அல்லது ஆறேமுக்கால் மணிக்கு வன்னாமோடு என்ற இடத்தில் டவுனாக இருந்தது வண்டியை வேகமாக ஓட்டிவந்ததால் திரும்பும்போது ஆக்சிடெண்ட் ஆகிவிட்டது. எனக்கு தலையில் தையல் போடும் அளவிற்கு காயமும் வலது பக்க மார்பு பகுதியிலும் உள்காயமும் ஏற்பட்டது. சுமார் 15 பேருக்கு அடிப்பட்டிருக்கும் அதில் யாருக்கு என்ன அடி என்று தெரியாது. அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதில் ஒரு மணி நேரம் பார்த்து பின்பு சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்த செல்லப்பட்டனர். போலிசார்

என்னை விசாரிக்கிவில்லை.

<u>எதிரி தரப்பு கு.வி</u>

போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரம் யார் சொல்லி தெரியும் என்றால் யாரும் சொல்லவில்லை நானே இருந்ததால் நடந்ததை சொல்கிறேன். மேக்சிகேப் வண்டியில் நான் உட்கார்ந்து இருந்தேனா நின்று இருந்தேனா என்றால் உட்கார்ந்து இருந்தேன். அந்த வண்டி ரூட் வேன் கிடையாது என்றால் சரிதான். வண்டி நிற்கவே எல்லோரும் சென்று ஏறிவிட்டோம் என்றால் வேலைக்கு செல்வதற்காக ஏறினோம். அந்த வண்டியில் நெரிசலாக இருந்தது என்றால் ஆம். அந்த வண்டியில் நாங்க் றியதே தப்பு தான் என்றால் சரிதான். 10ம் மாதம் மழைக்காலம் இருட்டு நேரம் என்றால் மழை வரவில்லை. 10ம் மாதம் இருட்டு சமயம் என்பதால் எந்த வண்டி எதிரில் வருகிறது என்று கணிக்க முடியாது என்றால் ஓரளவிற்கு பார்க்கிற மாதிரி வெளிச்சம் இருந்தது. அந்த வண்டியில் நான் பின்னால் உட்கார்ந்து இருந்தேன். அந்த வண்டி சம்பவத்தன்று எத்தனை கிலோ மீட்டர் வேகத்தில் சென்றது என்று நான் பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். அந்த சாலை குழி பள்ளம் உள்ள பராமரிப்பு இல்லாத சாலை என்றால் சரிதான். வண்டியில் நாங்கள் முறையற்று பயணம் செய்ததால் எங்களுடைய அஜாக்ரதையால் தான் வாகனம் கட்டுப்பாடின்றி விபத்திற்குள்ளானது என்றால் சரிதான்.